“சோதனை ஓட்டத்தைக் கப்பலால் கடக்க முடியவில்லை என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை” என்றார் கப்பலின் ஆணைய மேலாளர் (Commissioning Manager) திரு.பார்கர். நார்வே நாட்டை சார்ந்தவரான அவருடைய பேச்சால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. இந்தக் கப்பலின் வடிவமைப்புப்படி பதினான்கு முதல் பதினைந்து ‘நாட்டிக்கல் மைல்’ வேகத்தில் செல்ல வேண்டும். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாகக் கப்பல் ஆறிலிருந்து ஒன்பது நாட்டிக்கல் மைல் வேகத்தில் மட்டுமே சென்றது.

இந்த வேகத்தில் கப்பல் செல்வதற்கு எருமை மாட்டு வேகம் எவ்வளவோ மேல் என்ற பார்கரின் நையாண்டிப் பேச்சைக் கேட்டவர்கள் குற்றவாளியைப்போல என்னைப் பார்த்தனர். அவர்களின் அந்த ஏளனப் பார்வையில் தலைமை பொறியாளரான எனக்குத் தலைவலி ஆரம்பித்தது.